**In the Court of the Judicial Magistrate No.II,Kovilpatti**

**Deposition of Witness**

**CC 445 /2015**

**PW-1**

**28.10.2021**

| | |
|---|---|
| **Name** | ஸ்டாலின்தனசிங் |
| **Father's Name** | செல்லகுட்டி |
| **Village** | கரிசல்குளம் |
| **Taluk** | கோவில்பட்டி |
| **Calling** | பைனான்ஸ் |
| **Age** | 25 |

முதல் விசாரணை

நான் கரிசல்குளத்தில் குடியிருந்து வருகிறேன்,நான் பைனானஸ் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும் அவர்கள் எனது சொந்தகாரர்கள். எங்களுக்கும் எதிரகளுக்கும் சொந்தம் சம்பந்தமாக பிரச்சினை இருந்து வந்தது,கடந்த 03.07.15 ந்தேதியன்று எங்கள் ஊரிலுள்ள ரோட்டின் மீதுள்ள அந்தோனி கம்பாக்ஸில் நான் உட்கார்ந்திருந்தேன். எதிரிகள் நான்குபேரும் அங்கு வந்தார்கள். எதிரிகள் கையில் அருவாள் மற்றும ஆயு்தங்களுடன் வந்தார்கள். எதிரி தேவதயாளன் அவர் கையில் வைத்திருந்த அருவாள் மற்றும் சுததியல் கொண்டு எனது இடது புற தலையில் வெட்டிவிட்டார் எதிரிடிகள் என்னை பார்தது ஆபாசமாக பேசியும் உயிரோடு இருக்கவிடமாட்டேன் அழித்து விடுவேன் என்று மிரட்டினார்கள். உங்களுக்கு சொத்தில் எதும் பங்கு கொடுக்கமாட்டேன் என்று சொன்னார்கள்.இரத்ததுடன் காயபட்டு இருந்ததால் ஒரு ஆட்டோவில் என்னை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு நடந்த சம்பவத்திற்கு போலிசார் என்னிடம் புகார்மனு பெற்றார்கள் என்னிடம் காண்பிக்கபடும் புகார் மனு என்னிடம் விசாரிக்கவந்த

காவலரிடம் கொடுத்தது தான் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்தபுகார் மனு அ.சா.ஆ 1 ஆகும் ,இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்

குறுக்கு விசாரணை இல்லை.

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட
தட்டச்சு செய்யப்பட்டு./எழுதப்பட்டு
சாட்சிக்கு/ எதிரிக்கு படித்து
காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று
ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து
செய்தார்

(ஒம்) M.S.சுப்பிரமணியன்
நீதித்துறை நடுவர் எண்.2
கோவில்பட்டி